1979 பிப்ரவரி 20]

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, 300 சதுர அடி, வீடு என்பது மிகக்குறைந்த இடம். நெசவுத் தறி போட்டு, குடும்பம் நடத்த அந்த இடம் போதாது. அதைப் போல 5,000 ரூபாய் என்பதும் மிகக் குறைந்த தொகை. இந்த இரண்டையுமே அதிகப்படுத்த வேண்டும். அதைப்போல இதற்கு முன்னால் கட்டப்பட்ட வீடுகள் பல பழுதாகி இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம். கேள்வியை மட்டும் சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : பழுதடைந்த வீடுகளை பழுது பார்க்க முடியாமல் நெசவாளர்கள் கஷ்டப்படுகிறார்கள். அதனால் அவர்கள் வீட்டுக்கு வழங்கிய கடனையும் திருப்பிச் செலுத்த முடியவில்லை. ஆகவே, கடனை ரத்து செய்து, பழுதடைந்த வீடுகளை பழுதுபார்த்துக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ள பஞ்சாலைகள்

* வினா எண் 120 — திரு. திருப்பூர் ஆர். மணிமாறன் : மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 30-6-1977 முதல் மூடப்பட்டிருந்த பஞ்சாலைகளில் திறக்கப்பட்ட பஞ்சாலைகள் எவ்வளவு?

(ஆ) அதன் மூலம் புனர்வாழ்வு பெற்ற தொழிலாளர்கள் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்:

(அ) 30-6-77 அன்று மூடப்பட்டிருந்த 8 நூற்பாலைகளில் 7 ஆலைகள் திறக்கப்பட்டுவிட்டன.

(ஆ) இதன் மூலம் 1,944 தொழிலாளர்கள் புனர்வாழ்வு பெற்றுள்ளனர்.

திரு. ஆர். மணிமாறன் : தலைவரவர்களே, 7 நூற்பாலைகள் திறக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்கள். மீதமுள்ள ஒரு நூற்பாலையையும் திறக்க சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவரவர்களே, 120 தொழிலாளர்களைக் கொண்ட கோவை பத்மா மில்ஸ் ஒரு கூட்டாண்மை நிறுவனம், 9-11-1976 முதல் மூடப்

பட்டுள்ளது. பொருளாதார ரீதியில் லாபகரமாகச் செயல்பட வாய்ப்பு இல்லை என்ற காரணத்தால் வங்கிகள் கடன் வழங்கவில்லை. மேலும் அது ஒரு கூட்டாலை நிறுவனமாக இருப்பதால் அரசு உத்தரவாதம் வழங்க முன்வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன,

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. ஒழுங்குப் பிரச்சனைகள்

(அ) துணைக்கேள்விகள் கேட்க அனுமதி அளிப்பது குறித்து

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். கேள்வி நேரத்தின்போது பல கேள்விகளுக்கு நான் துணைக் கேள்வி கேட்க கையை உயர்த்திக் கொண்டிருந்த போதிலும் தாங்கள் அனுமதிக்கவில்லை. தாங்கள் வேண்டுமென்றே அப்படிச் செய்தீர்கள் என்று நான் சொல்லவில்லை. உங்கள் முன்னால் இருக்கிற மைக் உங்கள் பார்வையிலிருந்து என்னை மறைக்கிறது என்று நினைக்கிறேன். அதனால் நான் கை தூங்கினாலும் உங்கள் பார்வையில் படுவதில்லை. அது மட்டுமல்ல. எங்கள் பார்ட்டியில் கூட ஒரு துணைக் கேள்விக்கு தாங்கள் இடமளிக்கவில்லை. ஆகவே, இனிமேல் அம்மாதிரியான நிலைமை இல்லாமல் தாங்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தப் பேரவை உறுப்பினர்கள் எனக்கு ஒத்துழைக்க வேண்டும். நான் கேள்வி நேரத்திற்கென்று ஒரு மணி நேரமும் 20 நிமிடமும் எடுத்துக் கொண்டிருக்கிறேன். எப்போதுமே ஒரு மணி நேரத்திலேயே நான் முடித்துவிடுவதில்லை. பலருக்கும் வாய்ப்புத் தரவேண்டும் என்ற அடிப்படையில் நேரத்தை எப்போதுமே நீட்டித்து இருக்கிறேன். இருந்தாலும் சிலருக்கு வாய்ப்புக்கள் வராமல் போகலாம். அப்படித் தவறுவது இயற்கை. நீங்கள் வேண்டுமானால் ஆய்வுக் குழுவிலே எடுத்துச் சொல்லி கேள்வி நேரத்தை இரண்டு மணி நேரம் என்று ஆக்குங்கள். ஆகவே என்னால் முடிந்த வரை எல்லோருக்கும் வாய்ப்பு தந்துகொண்டுதான் இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன் வரிசையிலே உள்ளவர்களாவது கொஞ்சம் திறமையாக சுருக்கமாகக்கேள்வியைக் கேளுங்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.